# மேலூர் ஊராட்சி ஒன்றியம்
# பூஞ்சுத்தி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
# முன்னிலை: திரு. P. ராமநாதன் B.Com.,

ந.க.எண்.6/24- 25 நாள்: 25.07.2024

பொருள்: மனை குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் - மதுரை மாவட்டம் - மேலூர் ஊராட்சி ஒன்றியம் -பூஞ்சுத்தி ஊராட்சி/கிராமம் சர்வே எண்.1/1B1-ல் கட்டுப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனை எண்கள் 1 முதல் 49 வரைக்கான சுமார் 2.09 ஏக்கர் (அ) 8470 ச.மீ பரப்பளவில் அமையப்பட்டுள்ள மனையினை ஸ்தல ஆய்வு அறிக்கை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி உத்தரவிடல் - சார்பு.

பார்வை:

1. அரசானை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017.

2. அரசாணை எண்.172(ம) 21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017 (ம) 05.02.2019.

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், மதுரை மண்டலம் ந.க.எண்.5815/2018/மம4, நாள்:10.09.2018.

4. உதவி இயக்குனர்/உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் மதஜர உள்ளூர் திட்டக்குழுமம், ந.க.எண்.21919/2024/SWP-Y4MCWZVC நாள்:23.02.2024

5. மனுதாரர் திருமதி. பிருந்தா, த/பெ ராஜா என்பவரின் உறுதிமொழி கடிதம் நாள்: 25.07.2024.

6. மனுதாரர். திருமதி. பிருந்தா, த/பெ ராஜா பூஞ்சுத்தி ஊராட்சிக்கு எழுதிகொடுத்த சாலை மற்றும் பூங்கா இனாம் சாசனம் எண். 739/2024 (மேலூர் சார்பதிவளர்) நாள்: 27.02.2024

7. மனுதாரர் திருமதி. பிருந்தா, த/பெ ராஜா என்பவர் மின்சார வாரியத்திற்கு எழுதிக்கொடுத்த இனாம் சாசனம் எண்.740/2024 (மேலூர் சார்பதிவாளர்) நாள்: 27.02.2024.

வரன்முறை
ஊராட்சி

8. **மனுதாரர் திருமதி. பிருந்தா, த/பெ ராஜா அவர்களின் மனு நாள் இல்லை.**

9. **பூஞ்சுத்தி ஊராட்சி தீர்மானம்:128/24-25 நாள்: 10.07.2024.**

**<u>ஆணை:</u>**

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், செல்லூர், அகிம்சாபுரம், மேலத்தெரு, கதவு எண்.10-ல் வசிக்கும் திருமதி. பிருந்தா, த/பெ ராஜா என்பவரது சொந்தமான மனையினை வரன்முறைப் படுத்துவதற்காக விண்ணப்பிக்ககப்பட்டதை தொடர்ந்து மேலூர் ஊராட்சி ஒன்றியம் - பூஞ்சுத்தி ஊராட்சி/கிராமம் சர்வே எண். 1/1B1-ல் கட்டுப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனை எண்கள் 1 முதல் 49 வரைக்கான சுமார் 2.09 ஏக்கர் (அ) 8470 ச.மீ பரப்பளவில் அமையப்பட்டுள்ள மனைப்பிரிவில் அமையும் மனையினை வரன்முறைப்படுத்துவதற்கு இணையம் வழி பதிவு மேற்கொண்டதை தொடர்ந்து பார்வை 4-ல் காணும் நடவடிக்கைகளின் வழி வரப்பெற்ற வரைபடத்தில் மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மதுரை அவர்களின் ந.க.எண்.21919/2024/SWP-Y4MCWZVC நாள்: 23.02.2024 ம.வ/மா.வ.ந.ஊ.அ (மதுரை மாவட்டம்) எண்.21/2024 (இணையதள ஒப்புதல்) எண்ணிட்ட தொழில்நுட்ப வரைபடமும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை (1) மற்றும் (2)-ல் காணும் அரசாணைகள் மற்றும் பார்வை 4-ல் காணும் கடிதம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, பார்வை (9)-ல் காணும் பூஞ்சுத்தி ஊராட்சி தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு மனைக்கு ரூ.1000/- வீதம் (1000 x 49 = 49,000/-) (DD.No.727873 - SBI) மனுதாரர் திருமதி. பிருந்தா த/பெ ராஜா என்பவர் மேம்பாட்டு கட்டணம் செலுத்தியுள்ளார்.

மேலும் பார்வை 5-ல் காணும் உறுதிமொழி பத்திரத்தில், மனுதாரருக்கு சொந்தமான இடம் நிலம் கையகப்படுத்தும் நிலச்சீர்திருத்தம் சட்டம் 1961-ன் கீழ் இந்நிலங்கள் கவரப்பட்டால் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் 1978-ன் கீழ் பாதிப்பு ஏற்பட்டால் இவ்வுத்திரவு இரத்து செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளார். பார்வை 6, 7-ல் காணும் சாலை மற்றும் பூங்கா இனாம் சாசனத்தின்படி மேற்படி

வரன்முறைப்படுத்தப்படவுள்ள இடத்திற்கான சாலை மற்றும் பூங்காவினை பூஞ்சுத்தி ஊராட்சிக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் தானமாக பதிந்து கொடுத்துள்ளார்.

எனவே பார்வை 4-ல் காணும் உறுதிமொழி பத்திரம் ஆகியவற்றின்படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேலூர் ஊராட்சி ஒன்றியம் - பூஞ்சுத்தி ஊராட்சி/கிராமம் சர்வே எண்.1/1B1-ல் கட்டுப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனை எண்கள் 1 முதல் 49 வரைக்கான மனை ஒதுக்கீடும் எண்ணிடப்பட்ட மனையினை வரன்முறைப்படுத்தி இதன் வழி உத்தரவிடப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்தினால் வரைபடம் செய்யப்பட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. மதுரை உள்ளூர் திழட்டக்குழுமத்தால் வழங்கப்பட்ட வரைபடத்தில் பின்னர் முன் அனுமதி ஏதும் இல்லாமல் அளவுகளில் மாற்றம் செய்து கொள்ள கூடாது.

2. மனை வரன்முறைப்படுத்துவதற்கு அரசாணையின்படியான வளர்ச்சிக்கட்டணம் மற்றும் வரன்முறைப்படுத்துவதற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டதன் அடிப்படையில், மனை வரன்முறை செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுத்தரவு அளிப்பதற்கு மூன்று பெறப்பட்ட நில உரிமை ஆவணங் களின் அடிப்படையில் அரசாணையின்படி வரைபடத்துடன் உள்ள மனை வரன்முறைப்படுத்திட வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்பட்டது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தின நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டும். நில உரிமை குறித்து முடிவு செய்ய உள்ளாட்சி அமைப்பு பொருத்தமான அமைப்பு அல்ல.

3. மனைக்கு சாலைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஊராட்சி இடமானது நிகழ்வில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்க இயலாது. அவ்வாறு ஆட்சேபணை தெரிவிக்கும் நிகழ்வில் இவ்வுத்தரவு இரத்து செய்யப்படும்.

4. மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது. மனையில் கட்டப்படும் வீடுகளுக்கான வரைபட அங்கீகாரம் பெற தனியே விண்ணப்பிக்க வேண்டும்.

5. மனை உரிமைதாரர் சாலைரகளின் ஓரங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து பாதுகாக்க வேண்டும்.

6. சாலையோரங்களில் வளர்க்கப்படும் மரங்கள் அனைத்தும் ஊராட்சிக்கு சொந்தமானதாகும். மனை உரிமைதாரர் எவ்வித உரிமையும் கோர இயலாது.

7. மனை தொடர்பாக ஏதேனும் நீதிமன்ற வழக்குகள் இருப்பின் அதனை தாங்களே தங்களது சொந்த செலவில் பார்த்துக்கொள்ள வேண்டும். நீதிமன்ற தீர்ப்பில் இரத்து செய்திட தெரிவிக்கும் பட்சத்தில் இவ்வுத்தரவு உடன் இரத்து செய்யப்படும்.

8. மனையின் நடுவே உயர் குறைந்த அழுத்த மின் கம்பி பாதை செல்லுமாயின் அதன் போக்கை சாலையின் போக்கில் மனுதாரர் மின் வாரியத்தை தொடர்பு கொண்டு, தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

9. மனையின் நடுவே போக்கு கால்வாய் செல்லுமாயின், அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

**ஊராட்சி மன்றத்தலைவர்**
**பூஞ்சுத்தி ஊராட்சி,**
**மேலூர் ஊராட்சி ஒன்றியம்**

**பெறுநர்:**

திருமதி. பிருந்தா,
த/பெ ராஜா,
கதவு எண்.10, மேலத்தெரு,
அகிம்சாபுரம், செல்லூர்,
மதுரை வடக்கு வட்டம்,
மதுரை மாவட்டம்.

நகல்:

1. உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், முடக்காத்தான் பிரதான சாலை, கூடல் புதூர், மதுரை - 2 அவர்களுக்கு பணிந்துனுப்பப்படுகிறது.

2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மதுரை, அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

3. வட்டார வளர்ச்சி அலுவலர், (கி.ஊ) மேலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

4. சார்பதிவாளர், பத்திரபதிவு அலுவலகம், மேலூர் கிழக்கு அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.